**மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி**

First Published : 14 Jun 2011 04:26:04 AM IST

சென்னை, ஜூன் 13: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி வியாழக்கிழமை (ஜூன் 16) வழங்கப்படவுள்ளது.

இந்த உரத்தினால் காய்கறி மற்றும் அலங்காரச் செடிகளை செழிப்பாக வளர்க்க முடியும். வீட்டிலிருப்போர், மாணவர்கள், தொழில் முனைவோர், குடும்பத் தலைவிகள் என அனைவரும் பயிற்சியில் பங்கேற்கலாம்.பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு:நகர்ப்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மையம், 44, ஆறாவது அவென்யு, அண்ணாநகர், சென்னை-40. தொலைபேசி: 044-2626 3484, 4217 0506.

**மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள்**

First Published : 13 Jun 2011 03:00:20 PM IST

செய்யாறு, ஜூன் 12: செய்யாறு வட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது என செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விரிவுப்படுத்தப்பட்ட பயறு உற்பததி திட்டத்தின் கீழ் உளுந்து, துவரை விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

செய்யாறு வட்டத்தில் முக்கூர், தொழுப்பேடு, எறையூர், ஜடேரி, பாப்பாந்தாங்கல், கொருக்கை, மதுரை, பாராசூர், பைங்கினர், சிறுங்கட்டூர் ஆகிய கிராமங்களில் மண் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் உரங்களும், ஜிப்சமும் வழங்கப்படும்.

அதேப்போல பயிர் பாதுகாப்பு முறைகளை கையாண்டும் பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் பூச்சி மருந்துகளும் வழங்கப்படும்.

வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விசைத்தெளிப்பானும் மானிய விலையில் வழங்கப்படும். விசைத் தெளிப்பான்கள் 7 மட்டுமே கையிருப்பு உள்ளன.

1000 கிலோ சேமிப்புக் கலன் (பிளாஸ்டிக்) பொதுப்பிரிவினருக்கு 25 சதவீத மானியத்திலும், ஆதிதிராவிடர் பிரிவினருக்கு 33 சதவீத மானியத்திலும் வழங்கப்படும்.
திருத்திய நெல் சாகுபடி முறைக்கு வசம்பு கோனோவீடர், மார்க்கர் மற்றும் உயிர் உரம் ஆகியனவும் மானிய விலையில் வழங்கப்படும்.
தேசிய உணவு பாதுகாப்பு முகமை திட்டத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு மருந்துகளும், விதை கிராம திட்டத்தின் கீழ் நெல், மணிலா மற்றும் பயறு விதைகள் 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

**கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்**

First Published : 13 Jun 2011 01:50:05 PM IST

ஈரோடு, ஜூன் 12: கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் மேலாண்மை சார்ந்த இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது என கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் பாபு தெரிவித்தார்.
÷ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் பல்வேறு தொழிற்கல்வி வகுப்புகள் நடக்கின்றன. கூட்டுறவு பட்டயப் பயிற்சிக்கான இறுதித் தேர்வு தற்போது நடைபெற்று வருகிறது. இத்தேர்வை ஆய்வு செய்த கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பாபு கூறியது:
கூட்டுறவு சங்க பணியாளர்கள், இதர பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எம்.பி.ஏ, பி.காம், பி.ஏ, பி.பி.எம், எம்.காம் ஆகிய பட்டப் படிப்புகள், கம்ப்யூட்டர் ஹார்டுவேர், செல்போன் பழுதுநீக்கும் பயிற்சி, நகை மதிப்பீடு பயிற்சி, கம்ப்யூட்டர் பயிற்சி போன்ற தொழிற்பயிற்சிகள் நடத்தப்படுகிறது.
÷வீட்டா நிறுவனத்துடன் இணைந்து ஆங்கில பேச்சுத்திறன் பயிற்சி நடைபெறவுள்ளது. பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலகம் செல்வோர், சுய தொழில் புரிவோர், மகளிர் குழுவினர் என அனைவரும் விடுமுறை நாட்களில் நடத்தப்படும் இப்பட்டப் படிப்புகளில் சேர்ந்து பயின்று பட்டம் பெறலாம்.
÷செல்போன் பழுது நீக்குதல், கம்ப்யூட்டர் ஹார்டுவேர் போன்ற தொழிற்படிப்புகள் திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி மூலம் நடத்தப்பட்டு, மத்திய அரசின் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. இதன் மூலம் சுயதொழில் புரிவதும், வேலைவாய்ப்பு பெறுவதும் எளிதாகும்.
கூடுதல் விவரங்களுக்கு, ஈரோடு முனிசிபல் காலனியில் உள்ள ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

÷மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் லோகநாதன், துணைப்பதிவாளர் செந்தில்குமார், கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் செங்கோடப்பன், பிரசார அலுவலர் ஆனந்தராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**அதிக லாபம் பெற கண்வலிக் கிழங்கு பயிரிட யோசனை**

First Published : 13 Jun 2011 02:23:58 PM IST

Last Updated : 13 Jun 2011 03:14:30 PM IST

காரியாபட்டி, ஜூன் 12: வறண்ட நிலத்திலும் வளரும் தன்மையுள்ள கண்வலிக் கிழங்கு சாகுபடி செய்வதால் விவசாயிகள் அதிக அளவு லாபம் பெறலாம் என தோட்டக்கலைத் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

மூலிகைப் பயிரான கண்வலிக் கிழங்கு, வறண்ட நிலத்திலும் தாக்குபிடித்து வளரும் என்பதால், ஓரளவு மலை உள்ள சமவெளிப் பகுதிகள், வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான நிலப்பரப்பில் பயிரிடலாம்.

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விதைக்கிழங்கு நடவு செய்ய வேண்டும். விதைக்கிழங்குகளை ஓலைக்குடிசை போன்ற வெப்பம் தாக்காத இடங்களில் தரையில் 5-10 செ.மீ. உயரத்திற்கு மணலைக் கொட்டி அதன் மீது கிழங்குகளை 20 செ.மீ, உயரத்திற்கு மிகாமல் காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

பெவிஸ்டின் 5 கிராம் ஒரு கூடை மணலில் கலந்து தூவி விடுவது நல்லது. கிழங்கை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது அட்டைப்பெட்டியில் தான் கொண்டு செல்ல வேண்டும். நடவிற்கு எடுத்து செல்லும்போது கூடையில் காகிதம் அல்லது வைக்கோல் வைத்து எடுத்துச் செல்ல வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு சிறிய கிழங்காக (40-50 கிராம்) இருந்தால் 500 கிலோவும், பெரிய கிழங்காக (100-200 கிராம்) இருந்தால் 600 கிலோவும் தேவைப்படும். கிழங்கு 40 கிராமுக்கு குறைவாக இருந்தால் முதல் ஆண்டு 100 கிலோவுக்கு குறைவாகத்தான் விளைச்சல் கிடைக்கும்.

குறைந்தது 2 அல்லது 3 உழவு அவசியம். அதில் ஒன்று 5 கலப்பை உழவு செய்வது நல்லது. மண் அமைப்பிற்கு ஏற்றவாறு உழவை கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்யலாம். கடைசி உழவில் 2 அல்லது 3 டன் மக்கிய தொழுஉரம் இடவேண்டும். 6 அடி இடைவெளி விட்டு வரப்பு அமைக்க வேண்டும்.

வாய்க்கால் பாசனமாக இருந்தால் குழி வரப்பும், சொட்டுநீர் பாசனமாக இருந்தால் மேட்டு வரப்பும் அமைக்க வேண்டும். கிழங்கு முளைப்பு வந்த பின் நடவு செய்தால் 100 சதவீத முளைப்புத்திறன் இருக்கும். வாய்க்கால் பாசனமாக இருந்தால் கிழங்கை வாய்க்காலிலும்,

சொட்டுநீர் பாசனமாக இருந்தால் மேட்டு வரப்பிலும் 5-10 செ.மீ., ஆழத்தில் கிழங்குகளை படுக்கை வசமாக 10 செ.மீ இடைவெளியில் வரிசையாக வைக்க வேண்டும்.

நடவு முடிந்ததும் உடனடியாக நீர் விடத் தேவையில்லை. எனினும் இரண்டொரு நாளில் தண்ணீர் விட வேண்டும். சரியான பருவம் வந்தாலோ அல்லது பருவமழை பெய்தாலோ உடனடியாக முளைப்பு வந்துவிடும். மூங்கில் குருத்துபோல் வேகமாக வளர ஆரம்பிக்கும். மழை தொடர்ந்து பெய்தால் வேகமாக வளரும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய கோரிக்கை**

First Published : 13 Jun 2011 02:40:19 PM IST

அறந்தாங்கி, ஜூன். 12: விவசாயிகளின் பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என தமிழக முதல்வருக்கு கல்லணைக் கால்வாய் விவசாயிகள் சங்க கூட்டமைப்புத் தலைவர் ஆ. ராமசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து தமிழக முதல்வருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

ஏற்கெனவே திமுக அரசு 2006-ல் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகள் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ததில் சாதாரண விவாசாயிகள் யாரும் பயன் பெறவில்லை.

விலை உயர்ந்த விவசாய இயந்திரங்களான அறுவடை இயந்திரங்கள், டிராக்டர்கள்., டிப்பர் பவர்டில்லர்கள் வாங்கிய பெரு விவசாயிகள் மட்டும் அதில் பலனடைந்துள்ளனர். மேலும், அவர்களுக்கு வட்டியில்லா கடன்களும் இப்போது வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், இப்போது எவ்வித முன்னறிவிப்புமின்றி பயிர்க் கடன்கள் மக்கள் நீதி மன்றம் மூலம் வசூல் செய்யவும், அது தடை பெற்றால் நீதி மன்ற வழக்கு தொடருவதும், தேசிய வங்கிகளை முடக்கிவிட்டிருப்பதும் விவசாயிகளுக்கு மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நலன் கருதி, தேசிய வங்கிகள் வசூல் செய்வதைத் தவிர்த்து, வட்டியில்லாத நீண்டகால கடன்களாக கூட்டுறவு நில வள வங்கிகள் மூலம் மாற்றி அமைத்து, சிறு குறு விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**வேளாண் செலவைக் குறைக்க மண் பரிசோதனை அவசியம்**

First Published : 13 Jun 2011 02:52:01 PM IST

திருத்துறைப்பூண்டி, ஜூன் 12: விவசாயிகள் அதிக மகசூல் பெறவும், வேளாண் செலவைக் குறைக்கவும் மண் பரிசோதனை செய்வது அவசியம் என்றார் திருத்துறைப்பூண்டி வேளாண் துறை துணை இயக்குநர் டி. நடேசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விவசாயிகள் சாகுபடி நிலத்தில் உள்ள களர் உவர் நில பேரூட்டச் சத்துகளான தழை, மணி, சாம்பல் சத்துகளுடன் இரும்பு, மக்னீசியம், துத்தநாகம் சத்துகள் எந்த அளவில் உள்ளன என்பதைக் கண்டறிந்து, அதன்படி தேவையான உரங்களை சமச் சீராக இட, மண் ஆய்வு என்பது அவசியம்.

மண் ஆய்வின் முடிவின்படி பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இடுவதன் மூலம் வேளாண் செலவுகளை வெகுவாகக் கட்டுப்படுத்த முடியும்.

மண் மாதிரி எடுக்கும் முறை: ஓர் ஏக்கர் பரப்பளவில் பரவலாக நிழல் இல்லாத, வரப்பு ஓரம் இல்லாத, கால்நடைக் கழிவு, எருக் குவியல் இல்லாத 10 இடங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாதிரிகள் எடுக்கப்படும்போதும் முக்கால் அடி ஆழத்தில் வி வடிவத்தில் மண்ணை அப்புறப்படுத்தி, குழியின் ஓரத்தில் சரித்து 1.2 கிலோ வீதம் சேகரிக்க வேண்டும்.

அந்த மண்ணை நிழலில் உலர்த்தி, நான்கு பாகங்களாகப் பிரித்து, எதிர் எதிர் பாகங்களை மட்டும் சேர்த்து, மற்ற பகுதிகளை நீக்கி, மீண்டும் அதே முறையில் செய்து 1.2 கிலோவை எடுத்து பிளாஸ்டிக் பையில் வைக்க வேண்டும்.

விவசாயியின் முகவரி, புலஎண், சாகுபடி செய்யப் போகும் பயிர் போன்ற விவரங்களை எழுதி, வேளாண் உதவி அலுவலகத்தில் ரூ. 10 செலுத்தி அளிக்க வேண்டும்.

தற்போது திருவாரூரில் உள்ள நடமாடும் மண் ஆய்வகம் திருவாரூர் மாவட்டத்தில் மற்ற ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு சென்று விட்டதால், திருவாரூரில் ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்தில் உள்ள மண் ஆய்வகத்தில் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்கள் மூலம் மண் ஆய்வு செய்து, மண் வளப் பாதுகாப்பு அட்டையைப் பெற்று பயன் அடைய வேண்டும்.

**தினமலர்**

**வரத்து அதிகரிப்பால் பூசணிக்காய் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,00:09 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சந்தைக்கு பூசணிக்காய் வரத்து அதிகரித்துள்ளதால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு பல்வேறு பகுதிகளிலிருந்து பூசணிக்காய் வரத்துள்ளது. இங்கு வரும் பூசணிக்காயில் 75 சதவீதம் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது, பொள்ளாச்சி சந்தையில் பூசணிக்காய் சீசன் நடப்பதால் வரத்து அதிகரித்துள்ளது. வழக்கமாக, எட்டு டன் வரத்தாக இருக்கும் பூசணிக்காய் தற்போது 15 டன் வரத்தாக உள்ளது. இதில், கேரளாவுக்கு 10 டன் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் கிலோ 10 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ வெள்ளை பூசணிக்காய் இந்த மாதம் ஏழு ரூபாய்க்கும், சிவப்பு பூசணிக்காய் ஒரு கிலோ நான்கு ரூபாய்க்கும் விற்கிறது. பூசணிக்காய்க்கு ஏற்ப விலை இல்லாததால், பல இடங்களில் இதை அறுவடை செய்ய விவசாயிகள் முன்வராமல் தயக்கம் காட்டுகின்றனர்.

பொள்ளாச்சி பகுதி காய்கறி வியாபாரிகள் கூறியதாவது: மழை துவங்கியுள்ளதால், நாட்டு காய்கறிகளின் வரத்து குறைந்து விலை உயர்ந்து வருகிறது. அதேசமயம் பூசணிக்காய் விளைச்சல் அபரிமிதமாக உள்ளதால், வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இன்னும் இரு மாதங்களுக்கு சீசன் இருப்பதால், சந்தைக்கு வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வரத்து அதிகளவில் இருந்தால், விலையில் சரிவு ஏற்படும், என்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,00:11 IST

கோவை : கோவை விதைச்சான்று உதவி இயக்குனர் பழனி குமார் அறிக்கை:கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த அரசு விதை உற்பத்தியாளர்களுக்கு விதைச்சான்று துறை சார்பில், நாளை விதைச் சான்று நடைமுறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. துடியலூர், கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம்(ட்யூகாஸ்) கூட்ட அரங்கில் நடக்கும் இப்பயிற்சி வகுப்பில், வேளாண் உதவி இயக் குனர்கள், வேளாண் அலுவலர்கள், துணை வேளாண் அலு வலர்கள், உதவி விதை

அலு வலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள்(விதைகள்) பங்கேற்று பயனடையலாம்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லிக்காயில் சம்பாதிக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,00:11 IST

கோவை : நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வகுப்பு நாளையும், நாளை மறு தினமும் வேளாண் பல்கலையில் நடக்கிறது.
தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை: பல்கலையில் நாளையும், நாளை மறுதினமும் நெல் லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில், நெல்லி கலவை பானங்கள், சர்க்கரை பாகு, கேண்டி மிட்டாய் மற்றும் துருவல், தயாரித்த பொருட்களை சுகாதார முறையில் அடைத்தல், தொழில் துவங்குவதற்கான உரிமம், பொருட்களை விற்பனை செய்வதற்கு வங்கி கடன்வசதி பெறுதல் மற்றும் விற்பனை செய்யும் யுக்திகள் கற்றுத்தரப்படுகின்றன.
இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் 1,000 ரூபாய் செலுத்தி தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் பதிவு செய்து கொள்ள முடியாதவர்கள் பயிற்சி கட்டணத்தை வரைவோலை மூலம் "டீன், வேளாண் இன்ஜினியரிங் கல்லூரி' என்ற பெயரில், கோவையில் உள்ள பாரத ஸ்டேட் பாங்க்கில் பெறத்தக்க வகையில் எடுத்து, "பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோவை - 641 003' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் விபரங்களுக்கு, 0422 - 661 1340, 661 1268 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிலக்கடலை விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,00:33 IST

அவிநாசி : சேவூரில் நடந்த நிலக்கடலை ஏலத்தில், குவிண்டாலுக்கு ரூ.700 விலை அதிகரித்துள்ளது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 200 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 100 மூட்டை குறைவு. இருப்பினும் அனைத்து ரகமும் குவிண்டாலுக்கு 250 முதல் 700 ரூபாய் வரை விலை அதிகரித்தது.
இந்த வார ஏலத்தில், நிலக்கடலை ரகங்களின் விலை விவரம் (குவிண்டாலுக்கு): நிலக்கடலை முதல் ரகம் ரூ.4,400 முதல் 4,540 வரை, இரண்டாம் ரகம் ரூ.4,050 முதல் 4,350 வரை, மூன்றாம்

ரகம் ரூ.3,760 முதல் 4,000 வரை.

ஏலம் குறித்து ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) மகேந்திரசிங் கூறுகையில், ""கடந்த வாரத்தை விட, வரத்து சற்று குறைந்திருந்தாலும் கூட, நல்ல விலை கிடைத்தது. விவசாயிகள், கையிருப்பில் உள்ள நிலக்கடலையை மட்டுமே ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர். இன்னும் ஒரு மாதத்தில் புதிய நிலக்கடலை ஏலத்துக்கு வரும்," என்றார்.

**விதை பரிசோதனை அவசியம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,00:38 IST

ஊட்டி : "நீலகிரி மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை முன் பரிசோதனை செய்து அதன் தரத்திற்கேற்ப விதைக்க வேண்டும்,' என அறிவுருத்தப்பட்டுள்ளது. ஊட்டி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சிவராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: நீலகிரி மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை விதைக்கும் முன்பு பரிசோதனை செய்து அதன் தரத்திற்கேற்ப விதைத்தால் நல்ல விளைச்சல் பெறலாம். விதைகளின் மாதிரிகளை எடுத்து பரிசோதனை விபரம் குறிப்பிட்டு ஒரு விதை மாதிரிக்கு 30 ரூபாய் வீதம் செலுத்தினால் பரிசோதனை முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். விதைகளின் முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பிற ரக கலப்பு அறிந்து விதைப்பு செய்வதால் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுவதுடன் தோட்டங்களின் இன தூய்மையும் பாதுகாக்கப்படுகிறது. விதை மாதிரிகளை"வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், தோட்டகலை இணை இயக்குனர் அலுவலக வளாகம், ரோஜா பூங்கா, ஊட்டி' என்ற முகவரியில் நேரில் கொடுக்க வேண்டும். இவ்வாறு சிவராஜ் கூறியுள்ளார்.

**மானிய விலையில் விதை, உரம் வழங்க புதுகை விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,02:29 IST

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், விவசாயிகளுக்கு மானிய விலையில் தரமான விதைகள் மற்றும் உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்கவேண்டும்' என வேளாண்மைத் துறைக்கு விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. புதுக்கோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக்குழு கூட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் சோமையா தலைமை வகித்தார். செயலாளர் மாதவன் அறிக்கை படித்தார். எம்.எல்.ஏ., முத்துக்குமரன், அழகர்சாமி, முத்துசாமி உட்பட மாவட்டக் குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கான

உழவுப்பணிகள் துவங்கியுள்ள நிலையில், விவசாயிகளுக்கு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் மானிய விலையில் தரமான விதைகள் மற்றும் உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்க வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும். மாவட்டத்தில் வீசிய சூறாவளிக் காற்றினால் வாழைகள் தரையில் சாய்ந்து சேதமடைந்ததால், பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கவேண்டும். தென்மேற்கு பருவமழை துவங்கவுள்ள நிலையில் கண்மாய்கள், வரத்துவாரிகள் உள்ளிட்ட நீர்நிலைகளை தூர்வாரி கரைகளை பலப்படுத்தவேண்டும் என மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

**பயறு சாகுபடி நுட்பங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 14,2011,01:53 IST

மதுரை : சரியான உழவியல் நுட்பங்களை கடைபிடித்தால், பயறு வகை சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்," என, மதுரை விவசாயக் கல்லூரி பேராசிரியர்கள் ராமச்சந்திரன், பாலசுப்ரமணியன், பாலகிருஷ்ணன் தெரிவித்தனர்.
அவர்கள் கூறியதாவது:ஜூன் முதல் ஆக., வரையான ஆடிப்பட்ட பருவத்தில் பயறு வகைகளை விதைக்கலாம். கோ 6,7 ரக துவரையை ஹெக்டேருக்கு 10 கிலோவும், வம்பன் 3 ரகத்தை 25 கிலோவும் விதைக்க வேண்டும். உளுந்து மற்றும் பாசிப்பயறு ரகத்தை 20 கிலோவும், சோயா மொச்சை கோ 1 ரகத்தை 80 கிலோ அளவும், கோ 2 ரகத்தை 60 முதல் 70 கிலோவும் விதைக்க வேண்டும். ஒருகிலோ விதையுடன் இரண்டு கிராம் கார்பென்டாசிம் அல்லது திரம் கொண்டு விதைநேர்த்தி செய்யலாம். அல்லது ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைக்கோ டெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனஸ் புளூரசன்ஸ் கொண்டு விதைநேர்த்தி செய்யலாம். 24 மணி நேரத்திற்கு பின், ரைசோபியம் உயிர்உர விதை நேர்த்தி செய்வது அவசியம்.

விதைப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன், ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் 600 கிராம் ரைசோபியம் உயிர் உரத்தை, அரிசி கஞ்சி கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கலாம்.பயறு வகையில் ஹெக்டேருக்கு தழைச்சத்து 25 கிலோ சாம்பல்சத்து 25, மணிச்சத்து 50, கந்தகச் சத்து 20கிலோ இடவேண்டும். ஜிப்சம் மூலமாக கந்தகச் சத்தை இடலாம். சோயா மொச்சைக்கு 20 கிலோ தழைச்சத்து, 80 கிலோ மணிச்சத்து, 40 கிலோ சாம்பல்சத்து, 220 கிலோ ஜிப்சம் இடவேண்டும். விதைத்தவுடன் ஒரு முறை, மூன்றாவது நாளில் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். காலநிலை, மண்ணின் தன்மைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சலாம்.

பூக்கள் உதிர்வை தடுக்க, 50 சதவீத பூக்கும் பருவத்தின் போது, லிட்டருக்கு நான்கு மில்லி என்ற அளவில் "ப்ளானோபிக்ஸ்' வளர்ச்சி ஊக்கியை கைதெளிப்பான் மூலம் இலைகளின் தெளிக்கலாம். இதனுடன் சாலிசிலிக் அமிலம் 100 மில்லி கலந்து பூக்கும் பருவத்தில் தெளிக்கலாம். காய்கள் 80 சதவீத முதிர்ச்சி அடைந்தபின், செடிகளை அறுத்து கட்டி வைத்து, பின் வெயிலில் காயவைத்து, கை அல்லது இயந்திரத்தை கொண்டு விதைகளை பிரிக்கலாம். பயறுவகையில் ஒரு டன் வரையும், சோயா மொச்சையில் ஒன்றரை டன் வரையிலும் மகசூல் பெறலாம், என்றனர்.

**மறுதாம்பு கரும்பு பயிரில் கூடுதல் மகசூல் வேளாண் இணை இயக்குனர் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,23:58 IST

கடலூர் : மறுதாம்பு கரும்பு பயிரில் கூடுதல் மகசூல் பெற வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் ஆலோசனை கூறியுள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள மறுதாம்பு கரும்பு பயிரில் இரும்பு சத்துக் குறைவு காரணமாக இலைகள் பச்சையம் இன்றி வெளுத்து காணப்படுகிறது. இதன் காரணமாக மகசூல் பாதிக்கும். இரும்பு சத்து பற்றாக்குறை உள்ள மறுதாம்பு கரும்பு பயிர்களில் ஏக்கருக்கு பொரஸ்சல்பேட் மற்றும் யூரியாவை தலா இரண்டு கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் 15 நாட்களுக்கு ஒரு முறை இலைகளில் பச்சை பிடிக்கும் வரை தெளிக்க வேண்டும். மறுதாம்பு கரும்பு பயிரில் இரும்பு சத்து பற்றாக்குறையை போக்கிட முதல் நடவின் போது அடி உரமாக ஏக்கருக்கு 40 கிலோ பொரஸ்சல்பேட்டை ஐந்து டன் தொழு உரத்துடன் கலந்து வயலில் இட வேண்டும். நுண்ணூட்ட சத்து உரங்களை ஏக்கருக்கு 10 கிலோ இடுவதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம் என செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**நெல் கொள்முதல் நிலையம் மூடல் கால நீட்டிப்பு செய்ய வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,23:51 IST

சிறுபாக்கம் : நெல் கொள்முதல் நிலையத்தை கால நீடிப்பு செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிறுபாக்கத்தைச் சுற்றியுள்ள அரசங்குடி, எஸ்.புதூர், ஒரங்கூர், மங்களூர், மலையனூர், மாங்குளம் உட்பட 40 கிராம விவசாயிகளின் நலன்கருதி கடந்த சில மாதங்களுக்கு முன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் கொள்முதல் நிலையம் சிறுபாக்கத்தில் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஏராளமான விவசாயிகள், தங்கள் நெல்லை கொள்முதல் நிலையத்தில் விற்று பயனடைந்து வருகின்றனர். தினமும் 500 முதல் 750 மூட்டைகள் வரை நெல் வரத்து இருந்தது. இந்நிலையில் நாளையுடன் (15ம் தேதி) நெல் கொள்முதல் நிலையம்

தற்காலிகமாக மூடப்படும் என தகவல் வெளியானது. நெல் மூட்டைகள் முழு அளவில் விற்கப்படாமல் உள்ளதால், கொள்முதல் நிலையத்தை மேலும் ஒரு மாதம் கால நீடிப்பு செய்ய வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**அறுவடை தேங்காய்களை உடனே விற்க வேளாண்மை துணை இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,23:49 IST

கடலூர் : அறுவடை செய்த தேங்காய்களை உடனே விற்பனை செய்ய வேண்டுமென கடலூர் வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இந்தியாவில் 2009-10ம் ஆண்டு 1.90 மில்லியன் எக்டர் நிலப்பரப்பில் 10.148 மில்லியன் டன் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. கேரளா 3.88 மில்லியன் டன் உற்பத்தியுடன் முதலிடமும், தமிழகம் 3.42 டன்னுடன் இரண்டாமிடமும், கர்நாடகா 1.13 மில்லியன் டன் உற்பத்தியுடன் மூன்றாமிடமும் பிடித்தது. தமிழகத்தில் 0.38 மில்லியன் எக்டர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் தென்னை அதிகளவில் பயிரிடப்படுகிறது. உற்பத்தியில் 65 -70 சதவீதம் எண்ணெய் பயன்பாட்டிற்கு செல்கிறது. கடந்த ஒன்றரை ஆண்டாக ஏற்றுமதி சிறப்பாக உள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஒரு தேங்காய் விலை நான்கு ரூபாயில் இருந்து 6 ரூபாயும், தற்போது 10 லிருந்து 12 ரூபாய் என்ற நிலைக்கு வந்துள்ளது. அறுவடை செய்த தேங்காய்களை விற்பனை செய்வது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், பொள்ளாச்சிப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய விலைகளை ஆராய்ந்தது.

இந்தாண்டு மே, ஜூன் மாதங்களில் ஒரு தேங்காயின் பண்ணை விலை 10 ரூபாயில் இருந்து 12 ரூபாயாக இருக்கும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த விலை பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நிலவும். ஆனால் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் விலை சற்று குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விலை ஏற்றம் பெற குறைந்த வாய்ப்புகளே உள்ளன. எனவே, அறுவடை செய்த தேங்காய்களை விவசாயிகள் இருப்பு வைக்காமல் உடனே விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் உரிமம் ரத்து: வேளாண் அதிகாரி**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,23:48 IST

கடலூர் : உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறிய உர விற்பனை மையத்தின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் குறுவை சாகுபடி பணி துவங்கியுள்ளதால் ரசாயன உர தேவை அதிகரித்துள்ளது. இதனை சாதகமாக்கிக் கொண்ட உர வியாபாரிகள் கூடுதல் விலைக்கு விற்பதாக புகார் எழுந்தது. அதனையொட்டி வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) மற்றும் வேளாண் அலுவலர்கள் உர விற்பனை மையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அதில், மங்கலம்பேட்டையில் சம்சுதீன் அன் சன்ஸ் உர விற்பனை நிறுவனம் உரிய ஆவணங்கள் இன்றி உரம் விற்பனை செய்தது கண்டறியப்பட்டது.

அதனையொட்டி அந்த நிறுவனத்தின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்து உத்தரவிட்டனர். மேலும், தரமற்ற உரம் விற்பனை செய்தாலோ அல்லது போதிய ஆவணங்கள் இன்றி உரம் விற்பனை செய்தாலோ, அரசு நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு விற்றாலோ அந்த நிறுவனத்தின் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**திராட்சையில் இனிப்பை அதிகரிப்பது எப்படி**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,22:43 IST

கம்பம் : திராட்சையில் இனிப்பை அதிகரிக்க விவசாயிகள் செய்ய வேண்டியது என்ன என்று தோட்டக்கலைத்துறை அறிவித்துள்ளது. அதில் கூறியிருப்பதாவது: கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடி அதிகம் நடக்கிறது. ஒயின் தொழிற்சாலை அமைக்கப்பட்டவுடன், இங்கு சாகுபடியாகும் திராட்சைக்கு நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். இங்குள்ள திராட்சையில் 14 சதவீதம் இனிப்பு தன்மை இருக்கிறது. ஒயின் தயாரிப்பிற்கு 20 முதல் 24 பிரிக்ஸ் வரை இனிப்பு தன்மை இருக்க வேண்டும். திராட்சையில் இனிப்பு தன்மையை அதிகரிக்க, மழைக்காலங்களில் பூச்சி மருந்துகள் தெளிப்பதை தவிர்க்க வேண்டும். இதனால் 50 சதவீதம் செலவுகள் குறையும்.
கொடிகளில் பழங்கள் நெருக்கமாக இருக்க கூடாது. வெடிப்பு ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். அதற்கு நீர் மேலாண்மை அவசியம். சொட்டு நீர் பாசனம் நல்லது. ஆண்டிற்கு ஒன்று அல்லது

இரண்டு அறுவடை நல்லது. ஒயின் தயாரிப்பிற்கு தேவைப்படும் இனிப்பு தன்மையை அதிகரிக்க, பழம் எடுக்கும் தேதியில் இருந்து ஒரு வாரத்திற்கு பின் பழம் எடுக்க வேண்டும். அப்போது இனிப்பு தன்மை 20 முதல் 24 பிரிக்ஸ் அதிகரிக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கார்பைடு மாம்பழம் விற்பனை ஜரூர்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,22:35 IST

விருதுநகர் : விருதுநகரில் தொடர்கதையாகி வரும் கார்பைடு கொண்டு பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம் பகுதிகளில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதியில் மாந்தோப்புகள் அதிகமாக உள்ளன. இங்கிருந்து பறிக்கப்படும் மாங்காய்கள், விருதுநகர் மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன. பெரிய அளவில் உள்ள மாம்பழ குடோன்களில் மாங்காய்களை விரைவில் பழுக்க வைக்க, சைனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கார்பைடுகொண்டு பழுக்க வைக்கப்படுகின்றன. இதிலிருந்து வெளியேறும் வெப்பத்தினால் மாங்காய்கள் வெம்பி நிறம் மாறி மஞ்சள் கலரில் உருமாறுகின்றன. இந்த மாம்பழங்களை சாப்பிடும் பொதுமக்கள் வயிற்று வலி, குடல் நோய்களால் பாதிக்கின்றனர். நகராட்சி அதிகாரிகள் மாம்பழ குடோன்களில் தொடர்ந்து சோதனை நடத்தி மாம்பழங்களை பறிமுதல் செய்து, பினாயில் ஊற்றி அழிக்கின்றனர். ஆனால் சம்பந்தபட்டவர்கள் மீது நடவடிக்கை இல்லை. இது போன்றுதான் விருதுநகர் உள் தெருவை சேர்ந்த எம்.கண்ணன் என்பவர், கே.பி.பெரிய கருப்பன் தெருவில் வைத்துள்ள மாம்பழ குடோனில் நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் சோதனை நடத்தி, 10 கிலோ கார்பைடு கல் , 2 டன் மாம்பழங்களை பறிமுதல் செய்து அழித்தனர். ஆனால் சம்பந்தபட்டவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. இது தொடர்பானவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாலே இதன் நிலைக்கு தீர்வு கிட்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**சொட்டு நீர் பாசனத்துக்கான 100 சதவீத மானியத்தை விவசாயிகளுக்கே நேரடியாக கிடைக்க செய்ய வேண்டும் உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து பேட்டி**

*திருப்பூர், ஜூன்.14–*

*சொட்டு நீர் பாசனத்துக்கான 100 சதவீத மானியத்தை விவசாயிகளுக்கே நேரடியாக கிடைக்க செய்ய வேண்டும் என்று உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து கூறினார்.*

*மாநில செயற்குழு கூட்டம்*

*உழவர் உழைப்பாளர் கட்சி மாநில செயற்குழு கூட்டம் திருப்பூரில் நடந்தது. கூட்டத்துக்கு உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து தலைமை தாங்கினார். பொருளாளர் பாலசுப்பிரமணியன், மாநில ஆலோசகர் கே.சி.எம்.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மாநில கொள்கை பரப்பு செயலாளர் குப்புசாமி, மாநில இளைஞர் அணி நிர்வாகி கணேசன், மாநில தொழிலாளர் அணி நிர்வாகி வேல்முருகன், நெல்லை மாவட்ட தலைவர் மாடசாமி உள்பட பல மாவட்டங்களில் இருந்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஜீவா கிட்டு நன்றி கூறினார்.*

*கூட்டம் முடிந்ததும் உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து நிருபர்களிடம் கூறியதாவது:–*

*தஞ்சையில் மாநாடு*

*ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 5–ந் தேதி உழவர் தின மாநாடு கொண்டாடப்படுகிறது. உழவர் தின மாநாடு தஞ்சாவூரில் நடக்கிறது. இந்த மாநாட்டில் விவசாயிகளின் அடிப்படை கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.*

*உரமானியத்தை உர கம்பெனிகளுக்கு வழங்காமல் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்க வேண்டும். ஆட்கள் பற்றாக்குறை காரணமாக விவசாயம் சுருங்கி நசுந்து வருகிறது. எனவே வெளிநாடுகளில் இருந்து விவசாய தொழிலுக்கு பயன்படும் நவீன கருவிகளை அரசு இறக்குமதி செய்து, மானிய விலையில் விவசாயிகளுக்கு கிடைக்க செய்ய*

வேண்டும்.

நதி நீர் இணைப்பு

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் விவசாய தொழிலையும் சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை வைத்து வருகிறோம். மரபணு மாற்றப்பட்ட விதைகளை உரிய ஆராய்ச்சிக்கு பிறகு ஆபத்து இல்லை என்ற தெரிந்த பின் அதை பயன்படுத்த அனுமதிக்கலாம். அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் மத்திய, மாநில அரசுகள் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நதிகளை தேசிய மயமாக, நதிகள் இணைப்பை நிறைவேற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலக வர்த்தக நிறுவனத்தில் விவசாய தொழிலுக்கு விலக்கு அளிக்க வேண்டும். விவசாயம் பாதிக்காத வகையில் ஏற்றுமதி, இறக்குமதி கொள்கையை அரசு செயல்படுத்த வேண்டும். போலி விதை ஊடுருவலை தவிர்க்க, விதை உற்பத்தி மையங்களை கண்காணித்து தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்க செய்ய வேண்டும்.

சொட்டு நீர் பாசனம்

மரம் வளர்ப்பை மாநில அரசு ஊக்குவிக்க வேண்டும். விவசாய நிலங்களை அரசு துறை தேவைக்கு கையகப்படுத்தும் போது சந்தை மதிப்பில் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும். பத்திர ஈட்டுக்கடன், வீட்டு வசதி கடன், கோழிப்பண்ணை கடன், டிராக்டர் கடன் ஆகிய கடன்களையும் ரத்து செய்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்.

சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று தற்போதைய அரசு தேர்தல் வாக்குறுதியின் போது தெரிவித்தது. அந்த 100 சதவீத மானியமும் விவசாயிகளுக்கு நேரடியாக கிடைக்கும் வகையில் உரிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும்.

சாயக்கழிவுநீர் பிரச்சினை

சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும். கள் இறக்க அனுமதிக்க வேண்டும். சாயக்கழிவுநீர் சுத்திகரிப்பை அரசே ஏற்று நடத்த வேண்டும். 10 லட்சம் பேல் பஞ்சு ஏற்றுமதிக்கு அனுமதித்த போதிலும், உள்நாட்டில் பஞ்சு தட்டுப்பாடு ஏற்படாமல் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செல்லமுத்து கூறினார்.

## *கூடலூர் பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம்: ஏக்கர் கணக்கில் பயிரிட்ட பாகற்காய்கள் அழுகி நாசம்; விவசாயிகள் கவலை*



கூடலூர் புத்தூர்வயலில் மழைக்கு சரிந்து கிடக்கும் பாகற்காய் கொடிகளை படத்தில் காணலாம்.

*கூடலூர், ஜூன்.14–*

*கூடலூர் பகுதியில் தென் மேற்கு பருவமழையை யொட்டி ஏக்கர் கணக்கில் பயிரிட்ட பாகற்காய் கொடிகள் மற்றும் காய்கள் அழுகி நாசமானது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*

*தென்மேற்கு பருவமழை*

*கூடலூர் பகுதியில் தென் மேற்கு பருவமழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. மேலும் விவசாயமும் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த கோடை காலமான ஏப்ரல், மே மாதங்களில் 100–க்கும் மேற்பட்ட ஏக்கரில் பாகற்காய் கொடிகள் கூடலூர் பகுதியில் பயிரிடப்பட்டு இருந்தன. குறிப்பாக மங்குழி, புத்தூர் வயல், தொரப்பள்ளி, ஸ்ரீமதுரை ஊராட்சி, தேவர் சோலை, பாடந்தொரை ஆகிய பகுதிகளில் பாகற்காய் பயிரிடப்பட்டு இருந்தன. இங்கு விளையும் பாகற்காய்கள் அண்டை மாநிலமான கேரளா மற்றும் மேட்டுப் பாளையம் மார்க்கெட்டுக்கு அதிகளவு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன.*

*பாகற்காய் கொடிகள் அழுகல்*

*இந்த நிலையில் தென் மேற்கு பருவமழை மிக தீவிரம் அடைந்துள்ளதால் விடிய விடிய பலத்த மழை பெய்து வருகின்றன. இதனால் ஏக்கர் கணக்கில் விளைந்த பாகற்காய் கொடிகள் சரிந்து விழுந்தது. மேலும் கொடியில் இருந்த பாகற்காய்கள் அழுகி நாசமானது.*

*இதனால் பாகற்காய் பயிரிட்ட விவசாயிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தி*

உள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வருவாய் துறையினரிடம் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை என விவசாயிகள் ஆதங்கப்பட்டனர்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,690-2,740

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை 4,150-4,250

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,100-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,525-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 9,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 10,600.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,180.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்டஎண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,525.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,120.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 565-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.13-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 5,400 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,500 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கொண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.13-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 6,327
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8998
3. ஜெ 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 12,122
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 12,795
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,373
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,935
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,403

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.13-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் (கிலோவுக்கு) | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 40-00 | காலிப்பிளவர் | ரூ. | 28-30 |
| கத்தரிக்காய் | ரூ. | 16-20 | பொரியல் தட்டை | ரூ. | 22-24 |
| வெண்டைக்காய் | ரூ. | 20-24 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 9-10 | தேங்காய் | ரூ. | 13-14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10-12 | பட்டாணி | ரூ. | 100-00 |
| புடலை | ரூ. | 13-16 | பூண்டு | ரூ. | 95-00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22-24 | கறிவேப்பிலை | ரூ. | 12-10 |
| சுரைக்காய் | ரூ. | 10-12 | அகத்தி | ரூ. | 14-00 |
| பாகற்காய் | ரூ. | 22-24 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | குடைமிளகாய் | ரூ. | 28-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 34-40 |
| அரசாணிக்காய் | ரூ. | 7-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 34-00 |
| பேராக்காய் | ரூ. | 18-20 | கறிபீன்ஸ் | ரூ. | 28-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 28-30 | புஸ்பீன்ஸ் | ரூ. | 48-40 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26-00 | காளான் | ரூ. | 80-150 |
| சின்னவெங்காயம் | ரூ. | 30-32 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 13-00 | மாங்காய் | ரூ. | 10-12 |
| இஞ்சி | ரூ. | 34-00 | திராட்சை | ரூ. | 32-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-28 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22-24 | கொய்யா1கிலோ | ரூ. | 28-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24-00 | மாதுளை1கிலோ | ரூ. | 50-90 |
| கருணைகிழங்கு | ரூ. | 28-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 14-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | மாம்பழம் | ரூ. | 25-50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | ஆப்பிள் | ரூ. | 115-130 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | சாத்துக்குடி | ரூ. | 40-00 |
| முள்ளங்கி | ரூ. | 15-00 | நெல்லிக்காய் | ரூ. | 30-32 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-22 | ஆரஞ்சு | ரூ. | 75-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12-14 | வெள்ளரி | ரூ. | 16-26 |
| நூல்கோல் | ரூ. | 24-00 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்தமல்லி | ரூ. | 34-36 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-00 |
| ட்ரினிட்ஸ் | ரூ. | 24-00 | அவரை | ரூ. | 34-36 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | நிலக்கடலை | ரூ. | 30-32 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 | மக்காச்சோளம் | ரூ. | 50-00 |
| புதினா | ரூ. | 16-00 | தர்பூசணி | ரூ. | 14-00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25300 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,600 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 14,300 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7800 |
| சுக்கு(புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 10000 |
| கொப்பரை நாடன் | ரூ. 6875 |
| கொப்பரை ராசு | ரூ. 6625 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6875 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7600 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21700 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22450 |
| ரப்பர் பால் | ரூ. 10000 |
| காப்பி | ரூ. 10000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3600 |
| நேந்திரகாய் | ரூ. 1650 |
| இஞ்சி | ரூ. 850 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.13-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,630 | 105.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 61.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,550 | 100.00 |
| வனஸ்பதி | | |
| லிஸ்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.162.00 | அதிகபட்சவிலை | ரூ.261.00 |
| சராசரி விலை | ரூ.147.60 | சராசரி விலை | ரூ.242.65 |
| குறைந்தபட்சவிலை | ரூ.112.00 | குறைந்தபட்சவிலை | ரூ.202.00 |

**பட்டு நூல் ரூ.1,569**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,840.00 | 16,784.00 | 16,840.00 |
| ஒரு கிராம் | 2,105.00 | 2,098.00 | 2,105.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 54,085.00 | 60,250.00 | 58,000.00 |
| ஒரு கிராம் | 57.90 | 58.05 | 58.00 |